அ.வ.எண்.08/2015 நாள்:14.09.2021

வா.சா.1.வனரோஜா

1,2,4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

வா.சா.ஆ.1 என் தாயார் கிரையம் வாங்கியதற்கான பத்திரம் என்றால் சரிதான். என்னுடைய தாயார் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் வாங்கிய சொத்து தாவா சொத்து விவரத்தில் எத்தனையாவது அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளதென்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்குரையில் மொத்தம் எத்தனை அயிட்ட சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 3 அயிட்டம் குறிப்பிட்டுள்ளேன். முதல் அயிட்ட சொத்து என்னுடைய தந்தை பெயரிலும் 2 மற்றம் 3 அயிட்ட சொத்துக்கள் என்னுடைய தாயார் பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. என் தாயார் கிரையம் வாங்கிய சொத்து குறித்து செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தது பற்றி எனக்கு தெரியாது என்று தான் வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் எனக்கு செட்டில்மென்ட் பத்திரம் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால் எழுதி வைத்துள்ளார் என்னுடைய தாயார் என்னுடைய நகை, என் கணவர் எனக்கு போட்ட நகை மற்றும் என்னிடமிருந்து வாங்கி பணம் ஆகியவற்றிற்காக தான் அந்த செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் என்னுடைய அம்மா எனக்கு சொத்து எழுதி வைத்தார். நான் எத்தனை சதுரடி நிலத்தின் பாகம் கேட்டுள்ளேன் என்றால் என்னுடைய அப்பா மற்றும் அம்மா பெயரில் உள்ள சொத்துகளின் 8 ல் 1 பாகம் கோரியுள்ளேன். என்னுடைய அம்மா எனக்கு செட்டில்மென்ட் மூலம் எழுதி கொடுத்த சொத்தை இந்த வழக்கில் வழக்கு சொத்தாக காண்பிக்கவில்லை. என்னுடைய அப்பா பெயரில் மொத்தம் 6472 சதுரடி நிலம் உள்ளது என்றும் அதில் பாதைக்கு ஒதுக்கிய 864 சதுரடி நிலம் போக எனக்கு சொந்தமான புல எண்.59/39 ல் உள்ள நிலத்திற்கு பின்புறம் உள்ள 701 சதுரடி

நிலம் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளதென்றால் இல்லை.

சாட்சியின் வேண்டுகோளின்படி தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. /ஒ .ம்/

திரு. A. தனசேகரன், BSc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.